# இந்திய உளவு அமைப்பின் அடுத்த தலைவராக ரவி சின்ஹா நியமனம்




**புதுடெல்லி:** இந்திய உளவு அமைப்பான ரா-வின் அடுத்த தலைவராக ரவி சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

ராவின் தற்போதைய தலைவரான சமந்த் கோயலின் பதவிக் காலம் இம்மாதம் 30-ம் தேதியோடு நிறைவடைகிறது. இதன் காரணமாக, அடுத்த தலைவரை தேர்வு செய்வதற்கான அமைச்சரவைக் கூட்டம் கூடியது. இதில், ராவின் அடுத்த தலைவராக ரவி சின்ஹாவை தேர்வு செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதையடுத்து, ஜூலை 1-ம் தேதி ராவின் புதிய தலைவராக ரவி சின்ஹா பதவியேற்க இருக்கிறார்.

**1988-ம் ஆண்டு சத்தீஸ்கர் கேடர் ஐபிஎஸ் அதிகாரியான ரவி சின்ஹா, தற்போது அமைச்சரவை செயலகத்தின் சிறப்புச் செயலராக இருந்து வருகிறார். பதவி ஏற்றதில் இருந்து இரண்டு ஆண்டுகள் அல்லது மறு உத்தரவு வரும் வரை ராவின் தலைவராக தொடர்வார்.**

## அசாம் | கனமழை, வெள்ளம், நிலச்சரிவுக்கு 33,000 பேர் பாதிப்பு; பயிர்கள் சேதம்



**கவுகாத்தி:** அசாம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இரவு முழுவதும் பெய்த கனமழை காரணமாக மாநிலத்தில் வெள்ள அபாயம் நிலவி வருகிறது. கிராமங்கள், நகரங்கள், விவசாய நிலங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. அசாம் மாநிலத்துக்கு ‘ரெட் அலட்ர்ட்’ விடுத்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், வியாழக்கிழமை வரை மாநிலத்தின் பல்வேறு மாாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக் கூடும் எனக் கணித்துள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் குவாஹாட்டி பிரந்திய வானிலை ஆய்வு மையம் ‘ரெட் அலட்ர்ட்’ விடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையில், "அசாமின் கீழ்ப்பகுதியில் இருக்கும் மாவட்டங்களான கோக்ராஜ்ஹர், சிராங், பாக்சா, பார்பெட்டா மற்றும் பொங்கைகான் பகுதிகளில் கனமழை (24 மணி நேரத்தில் 7 - 11 செ.மீ.,) முதல் மிக கனமழை (24 மணிநேரத்தில் 11 முதல் 20 செ.மீ., வரை) மிக அதிகமான கன மழை (24 மணிநேரத்தில் 20 செ.மீ., மேல்) மழைப்பெய்யக்கூடும். அதே நேரத்தில், துப்ரி, கம்ருப், கம்ருப் மெட்ரோபாலிட்டன், நல்பரி, திமா ஹாசோ, கச்சார், கோல்ப்ரா மற்றும் கரிம்கஞ்ச் மாவட்டங்களில் கன முதல் மிக கன மழைப்பெய்யக்கூடும்". இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் செவ்வாய்க்கிழமைக்கு ஆரஞ்சு அலர்ட்டும், அதைத் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு மஞ்சள் அலார்ட்டும் விடுத்துள்ளது.

அசாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் வெள்ளம் குறித்து வெளியிட்டுள்ள தினசரி அறிக்கையில்,"கச்சார், டர்ராங், திமாஜ், திப்ருகர், கோல்கட், ஹோஜாய், லக்கிம்பூர், நாகான், நல்பாரி, சோனிட்பூர், டின்சுகியா மற்றும் உடல்குரி மாவட்டங்களில் வெள்ளம் காரணமாக 33,400க்கும் அதிமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் லக்கிம்பூர் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு வெள்ளத்தால் 25,200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். திப்ருகரில் 3,800 பேரும் தின்சுகியாவில் 2,700 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிர்வாகத்தின் சார்பில் செயல்படும் ஒரு வெள்ள நிவாரண முகாமில் 9 பேர் தங்கவைக்கப்பபட்டுள்ளனர். அதே நேரத்தில் மூன்று மாவட்டங்களில் 16 நடமாடும் நிவாரண விநியோக மையங்கள் செயல்படுகின்றன. தற்போதைய நிலவரப்படி, 142 கிராமங்கள் வெள்ளம் சூழ்ந்துள்ளது. 1,510.98 ஹெர்டர் பரப்பளவிலான பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கி சேதமடைந்துள்ளன.

பிஸ்வநாத், போகைகான், திப்ரூகர், கோக்ராஜ்கர், லக்கிம்பூர், மஜுலி, மோரிகான், நாகான், சிவசாகர், சோனிட்பூர், தெற்கு சல்மாரா மற்றும் உடால்குரி மாவட்டங்களில் மிகப்பெரிய அளவில் மண் அரிப்புகள் நிகழ்ந்துள்ளது. திமா மற்றும் கரிம்கஞ்ச் பகுதிகளில் கனமழை காரணமாக நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

சோனிட்புர், லக்கிம்பூர், கச்சார், திமேஜ், கோலபாரா, நாகான், உடால்குரி, சிராங், திப்ருகர், கமருப், கர்பி அன்லாங், கரீம்கஞ்ச், போன்காய்கான், மஞ்சுலி, மோரிகான் திவாசாகர் மற்றும் தெற்கு சல்மாரா மாவட்டங்களில் சாலைகள், பாலங்கள் பிற உள்கட்டமைப்பு வசதிகள் சேதமைடந்துள்ளன.

மேலும், நேமாகதிகாசடில் பிரம்மபுத்திரா நதியும், அதன் துணை நதிகளான புதிமாரி என் ஹெச் ரோடு கிராஸிங்கிலும், கமபுரி நதி கோபிலியிலும் அபாய அளவினையும் தாண்டி ஓடுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏவுகணை கப்பலை வியட்நாமுக்கு பரிசளிக்கிறது இந்தியா




**புதுடெல்லி:** ஏவுகணையை ஏந்திச் செல்லும் ரோந்து கப்பலான ஐஎன்எஸ் கிர்பான்-ஐ, வியட்நாமுக்கு இந்தியா பரிசாக வழங்க உள்ளது.

இரண்டு நாள் பயணமாக நேற்று புதுடெல்லி வந்த வியட்நாம் பாதுகாப்புத் துறை அமைச்சர் பான் வான் கியாங், ராஜ்நாத் சிங்கை இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளின் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் உடன் இருந்தனர். அப்போது பேசிய ராஜ்நாத் சிங், "கடந்த ஆண்டு ஜூன் மாதம் நான் வியட்நாம் வந்தபோது, இரு நாடுகளுக்கு இடையே பாதுகாப்பு தளவாட ஆதரவு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கூட்டு தொலைநோக்கு அறிக்கையும் வெளியிடப்பட்டது. இந்த கூட்டு தொலைநோக்கு அறிக்கை, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பின் விரிவான வழிகாட்டி ஆவணமாக உள்ளது. இந்த அறிக்கை நமது பாதுகாப்பு ஒத்துழைப்பின் நோக்கத்தையும் அளவையும் மேம்படுத்தி உள்ளது. இது எதிர்காலத்திற்கான பாதையை அமைக்கும் என நம்புகிறேன்" என தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், ஒத்துழைப்பு திருப்தி அளிப்பதாக இரு தரப்பும் ஒப்புக்கொண்டதாகவும் தகவல் வெளியிட்டுள்ள இந்திய பாதுகாப்பு அமைச்சகம், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ்

கிர்பான், வியட்நாமுக்கு பரிசாக வழங்கப்படும் என ராஜ்நாத் சிங் அறிவித்தார் என்றும் தெரிவித்துள்ளது.

"பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு, கடற்பாதுகாப்பு, பன்னாட்டு ஒத்துழைப்பு ஆகிய நடைமுறையில் உள்ள ஒத்துழைப்புகளின் நிலை குறித்து இரு அமைச்சர்களும் ஆய்வு மேற்கொண்டார்கள். அப்போது, ஏவுகணையை ஏந்திச் செல்லும் ரோந்து கப்பலான ஐஎன்எஸ் கிர்பான், வியட்நாமுக்கு பரிசாக வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அறிவித்தார். உள்நாட்டு தொழில்நுட்பத்தில் கட்டப்பட்ட ரோந்து கப்பலான ஐஎன்எஸ் கிர்பான், ஏவுகணையை ஏந்திச் செல்லக்கூடிய திறன் வாய்ந்தது. வியட்நாம் கடற்படையின் திறனை மேம்படுத்துவதில் ஐஎன்எஸ் கிர்பான் முக்கிய மைல்கல்லாக இருக்கும்" என இந்திய பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

தனது பயணத்தின் ஒரு அங்கமாக, டிஆர்டிஓ தலைமையகத்துக்கு வருகை தந்த வியட்நாம் பாதுகாப்புத் துறை அமைச்சர் பான் வான் கியாங், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் கூட்டு உற்பத்தியில் ஒத்துழைப்பதன் மூலம் பாதுகாப்பு தொழில்துறை திறன்களை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

## மூன்றாம் பாலினத்தவர்களுக்கென சுய உதவி குழு: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி



**திருச்சி:** மூன்றாம் பாலினத்தவர்களுக்கென சுயஉதவிக் குழு தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் சார்பில், திருச்சியில் நேற்று நடைபெற்ற உற்பத்தியாளர் - சந்தையாளர் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, உற்பத்தியாளர் கூட்டமைப்பின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியை தொடங்கி வைத்து, உற்பத்தி பொருட்களை பார்வையிட்டு, ஒரிட சேவை மையத்தின் 'மதி சிறகுகள்' இலச்சினையை வெளியிட்டார்.

பின்னர், அவர் பேசியது: தமிழகத்தில் முதல்முறையாக உற்பத்தியாளர் - சந்தையாளர் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி திருச்சியில் நடைபெறுகிறது. மகளிர் சுயஉதவிக் குழுவினர் மிக நேர்த்தியாக பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். ஆனால், அவற்றை சந்தைப்படுத்துவதில் பல்வேறு இடையூறுகளை சந்திக்கின்றனர்.

அதனால், அவர்களுக்கு போதிய அளவு லாபம் கிடைக்காமல் போகிறது. அவர்களது உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கும் விதமாக இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெண்கள் நிர்வாகத்திறன் மிக்கவர்கள். அதனால்தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வெற்றிகரமாக செயல்படுகின்றன.

கடன் உதவிபெறும் நிலையிலிருந்து பொருளாதாரம் ஈட்டும் நிலைக்கு சுய உதவிக் குழு பெண்கள் உயர்ந்துள்ளனர். முதல்வரிடம் ஆலோசித்து அனுமதி பெற்று, மூன்றாம் பாலினத்தவர்களுக்கென பிரத்யேக சுய உதவிக் குழு தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். திறன் பயிற்சி, மூலப் பொருட்கள் கொள்முதல், சந்தைப்படுத்துதல் என அனைத்து வகைகளிலும் இந்த அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், வாழ்ந்து காட்டுவோம் திட்டப் பயனாளர்களின் ஊக்கமிகு வெற்றிக் கதைகள் அடங்கிய வெற்றிக்கதை புத்தகத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார். மேலும், உற்பத்தியாளர் - சந்தையாளர்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலர் பா.செந்தில்குமார் தலைமை வகித்தார். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் முதன்மை செயல் அலுவலர் எஸ்.திவ்ய தர்ஷினி தொடக்க உரையாற்றினார். முதன்மை செயலாக்க அலுவலர் பத்மஜா வரவேற்றார். ஆட்சியர் மா.பிரதீப் குமார் அறிமுக உரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், ஆணையர் வைத்திநாதன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அ.சவுந்தர பாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, எஸ்.இனிகோ இருதயராஜ், சீ.கதிரவன், மாநகராட்சி துணை மேயர் ஜி.திவ்யா, மாவட்ட ஊராட்சித் தலைவர் த.ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

EVA STALIN IAS ACADEMY